## <u>மாவட்ட  உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>

**முன்னிலை:**–திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 4ம் நாள்
2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18ம் நாள் வியாழக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.74/2025</u>**
**<u>CNR No. TNED13-000420-2025</u>**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
கொடுமுடி காவல்நிலையம்,
குற்ற எண்.58/2025 – குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

பொன்னர்சங்கர், வயது 30/2025, த/பெ.செல்வம்,
697, கிட்டக்காடு, திருவரன்குளம் அஞ்சல்,
ஆலன்குடி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம். – எதிரி

<table>
<tr><th>வரிசை எண்</th><th>விளக்கம்</th><th colspan="2">விவரங்கள்</th></tr>
<tr><td>1.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="2">10.04.2025</td></tr>
<tr><td>2.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டநாள்</td><td colspan="2">10.04.2025</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>10.04.2025</td><td>காவல்நிலைய பிணையில் சென்ற நாள் 10.04.2025</td></tr>
<tr><td>4.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">08.07.2025</td></tr>
<tr><td>5.</td><td>குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="2">29.10.2025</td></tr>
<tr><td>6.</td><td>பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 355ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர</td><td colspan="2">1. சரண்டர் மனு எம்.பி.எண்.1/2026 உத்தரவு நாள் 17.02.2026 – அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.18 11:10:38 +0530

<table>
<tr><td></td><td>மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவகள்</td><td>2. பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 72(2)ன் கீழான மனு எம்.பி.எண்.2/2026 உத்தரவு நாள் 17.02.2026 – அனுமதிக்கப்பட்டது.<br>3. பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 348ன் கீழான மனு எம்.பி.எண்.3/2026 உத்தரவு நாள் 17.03.2026 – அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>18.11.2025</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 351(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td>10.06.2026</td></tr>
<tr><td>9.</td><td>எதிரிமீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td><table>
<tr><th>பிடியாணை வழங்கப்பட்ட நாள்</th><th>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</th></tr>
<tr><td>06.01.2026</td><td>17.02.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td>10.06.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td>18.06.2026</td></tr>
</table>

இவ்வழக்கு 08.07.2025ம் தேதி சி.சி.எண்.74/2025 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கு இறுதியாக 10.06.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பரமசிவம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:10:46 +0530

1. **கொடுமுடி காவல் உதவி ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

10.04.2025ம் தேதி காலை 07.45 மணிக்கு கொடுமுடி காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட வடக்குபுதுப்பாளையம் வாய்க்கால் கரையில் எதிரி அரசு அனுமதியின்றி அரசு மதுபானம் 180ML அளவுள்ள Black Bearl பிராந்தி பாட்டில்கள் 13ஐ அரசு மதுபானக்கடைகள் மூடியுள்ள நேரத்தில் அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் விற்பனை செய்ய வைத்திருந்ததாக எதிரி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)C)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக கொடுமுடி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **வழக்கை புலன் கொண்டு எதிரியை அழைத்தல்:**

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 230ன் கீழ் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **குற்றச்சாட்டுக்கள் மற்றும் எதிரியின் கோரிக்கை**:

எதிரிக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முதல் தோற்ற வழக்கு இருந்ததால் பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 263(2)ன் கீழ் எதிரிமீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வழக்கை மேல் தொடர விளக்கிக்கேட்டபோது தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டது.

4. **வழக்கு விசாரணை**:

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:10:51 +0530

5. <u>**அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**</u>

(i) **அ.சா.1 ரமேஷ், தலைமை காவலர் தனது சாட்சியத்தில்** 10.04.2025ம் தேதியன்று கொடுமுடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.தமிழ்செல்வி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் மதுவிலக்கு கண்காணிப்பு சம்பந்தமாக தானும், 2544 தலைமை காவலர் ரஞ்சித்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோருடன் வடக்கு புதுப்பாளையம் வாய்க்கால் கரையில் காலை 07.45 மணிக்கு கண்காணித்து வந்தபோது ஒரு நபர் கையில் பையுடன் சந்தேகப்படத்தக்க வகையில் நின்று கொண்டிருந்தார் என்றும், அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ml அளவுள்ள Black Pearl Brandy பாட்டில் எண்ணிக்கை 13 சீல் உடைக்காத நிலையில் வைத்திருந்தார் என்றும், அவரை விசாரிக்க அவர் அரசு மதுபானகடைகள் மூடியிருக்கும் சமயத்தில் அதிக விலைக்கு விற்க வைத்திருப்பதாக தெரிவித்தார் என்றும், உதவி ஆய்வளார் அன்று காலை 07.45 மணிக்கு கைது செய்து அவர் வைத்திருந்த 180 ml அளவுள்ள Black Pearl Brandy பாட்டில் எண்ணிக்கை 13யும் தங்கள் முன்னிலையில் **அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர்** தயார் செய்து கைப்பற்றினார் என்றும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிமீது நிலைய குற்ற எண்.58/2025 ச/பி.4(1)(c) TNP Act படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**(ii) அ.சா.2 தமிழ்செல்வி காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 10.04.2025ம் தேதியன்று தான் கொடுமுடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோருடன் தனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வடக்குபுதுப்பாளையம், வாய்க்கால்கரை அருகில் காலை 07.45 மணிக்கு சென்றபோது அங்கு ஒரு நபர் சந்தேகத்திற்கு இடமான வகையில் கையில் பையுடன் நின்றுகொண்டிருந்தார் என்றும், சந்தேகத்தின் பேரில் எதிரியை பிடித்து எதிரியிடம் இருந்த பையை சோதனை செய்த போது எதிரி வைத்திருந்த பையில் சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை –13 இருந்தது என்றும், எதிரியை விசாரித்தபோது எதிரி அரசு மதுபான கடையில் இருந்து அதிக

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:10:56 +0530

லாபத்திற்கு விற்கும் பொருட்டு மதுபானங்களை வாங்கி வைத்திருப்பதாக கூறியதாகவும், எதிரியை கைது செய்து எதிரி வைத்திருந்த சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை –13ஐ தன்னுடன் இருந்த போலீஸ் சாட்சிகளான தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிமீது கொடுமுடி காவல்நிலைய குற்ற எண்.58/2025 ச/பி.4(1)(C) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்படி **அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாகவும், சாட்சிகள் தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான **அ.சா.பொ.1 சுமார் 180ML அளவு கொண்ட Black Pearl Brandy பாட்டில்கள் –13ஐ அ.சா.ஆ.3 படிவம் 91** மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்ததாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிமீது Tamilnadu Prohibition Act, Section 4(1)(C)ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 ரஞ்சித்குமார் தலைமை காவலர் தனது சாட்சியத்தில்** 10.04.2025ம்தேதி காலை 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி அவர்களுடன் தானும், தலைமை காவலர் 2046 ரமேஷ் என்பவரும் வடக்கு புதுப்பாளையம் வாய்க்கால் கரையில் ரோந்து அலுவலலில் இருந்தபோது சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த ஒரு நபரை தான், தலைமை காவலர் ரமேஷ், சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோர் பிடித்து விசாரித்தபோது எதிரி அவரது கையில் ஒரு பை வைத்திருந்ததாகவும், அந்த பையில் சீல் உடைக்காத நிலையில் அரசு மதுபானங்கள் 180 ml கொள்ளளவு உடைய Black Pearl மதுபானத்துடன் கூடிய பாட்டில்கள் எண்ணிக்கை – 13 இருந்தது என்றும், மேற்படி மதுபானங்களை அரசு மதுபான கடையில் வாங்கி, லாப நோக்கத்திற்காக அதிக விலைக்கு விற்பனை செய்யும் பொருட்டு வைத்திருப்பதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், சார்பு ஆய்வாளர்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:02 +0530

எதிரியை கைது செய்து எதிரி வைத்திருந்த மதுபாட்டில்களை போலீஸ் சாட்சிகளாகிய தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டவாது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4** என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

6. **<u>எதிரியிடம் பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவல்</u>:**

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து எதிரியிடம் பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 351(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி வழக்கை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>:–

எதிரி மதுபானங்களை டாஸ்மாக் கடையில் இருந்து வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக சுமார் 180ML அளவு கொண்ட Black Pearl Brandy பாட்டில்கள் –13ஐ வைத்திருந்ததாக அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார் என்பதை அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரியை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C) ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என அரசு தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.18 11:11:07 +0530

9. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வழக்கின் புகார்தாரரே இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக செயல்பட்டு உள்ளதாலும், சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரிமீது பொய்யாக இவ்வழக்கு சுமத்தப்பட்டுள்ளது என்றும், எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததாலும் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 10.04.2025ம் தேதி காலை 07.45 மணிக்கு வடக்குபுதுப்பாளையம் வாய்க்கால் கரையில் எதிரி அரசு அனுமதியின்றி அரசு மதுபானம் 180ML அளவுள்ள Black Bearl பிராந்தி பாட்டில்கள் 13ஐ அரசு மதுபானக்கடைகள் மூடியுள்ள நேரத்தில் அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் விற்பனை செய்ய வைத்திருந்தாரா என்பதை அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

11. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "தாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரியிடம் இருந்து யாரேனும் மதுபாட்டில்களை வாங்கினார்களா என்றால் இல்லை" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் " தாங்கள் சென்ற சமயத்தில் எதிரி யாருக்காவது மது விற்றுக்கொண்டிருந்தாரா என்றால் அந்த சமயத்தில் யாரும் இல்லை" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது அரசு தரப்பில் எதிரி மதுபான கடை மூடியுள்ள நேரத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கான மதுபான பாட்டில்களை வைத்திருந்தார் என கூறுவது நம்பும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:11 +0530

12. அ.சா.2 புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் "அரசாணையின்படி தனி நபர் சொந்த உபயோகத்திற்காக 4.5 லிட்டர் மதுபானங்கள் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான் என்றும், தான் கைப்பற்றிய மதுபாட்டில்கள் அரசாணைக்கு உட்பட்டு தான் இருந்தது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது எதிரி தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதமான புள்ளி விவர கணக்கிற்காக எதிரிமீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற வாதம் ஏற்கும்படியாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. அரசு தரப்பில் எதிரி அரசு மதுபானம் 13 BLACK PEARL பிராந்தி பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய சட்ட விரோதமாக வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் G.O.Ms.No.14, Home Prohibition and Excise (vi) Department, dated 09.06.2017 அரசாணையின்படி ஒரு தனி நபர் 4.5 லிட்டர் வரையிலான இந்திய தயாரிப்பு மதுபானத்தை வைத்துகொள்ளலாம் என உள்ளது. இவற்றை வைத்து பார்க்கும்போது எதிரி வைத்திருந்த 13 BLACK PEARL Brandy பாட்டில்களானது மேற்படி அரசாணைக்கு உட்பட்டு தான் வைத்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளையானது பெரிய சொக்கநாதன் //எதிர்// அரசின் சார்பாக காவல் ஆய்வாளர், எஸ்.எஸ்.பேட்டை காவல்நிலையம், சிவகங்கை மாவட்டம் என்ற வழக்கில் எதிரி 15 பிராந்தி பாட்டில்கள் வைத்திருந்ததை G.O.Ms.No.14, Home Prohibition and Excise (vi) Department, dated 09.06.2017 அரசாணையின்படி ஒரு தனி நபர் 4.5 லிட்டர் வரையிலான இந்திய தயாரிப்பு மதுபானத்தை வைத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளது. எதிரி 180 ML அளவு கொண்ட 13 BLACK PEARL Brandy பாட்டில்கள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டபட்டுள்ளது. இவற்றைப் பார்க்கும்பொழுது எதிரி அரசு நிர்ணயித்துள்ள அளவைவிட குறைவாகத்தான் மதுபானத்தை வைத்திருந்தது தெரிய வருகிறது.

14. மேலும் சம்பவ இடத்தை நிரூபிக்கும் பொருட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவற்றை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. இதன்மூலம் அரசு தரப்பில் சம்பவ இடத்தை நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:16 +0530

15. இந்த வழக்கை பொறுத்தவரை அ.சா.2 புகார்தாரரே புலன் விசாரணை மேற்கொண்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளை 2025-2-L.W.(Crl.) 840, R.Kartheeswari //Vs// The State of Tamil Nadu rep. By The Inspector of Police, Virudhunagar Bazar Police Station, Virudhunagar District என்ற வழக்கில் சாட்சிகள் அனைவரும் புலன் விசாரணை அதிகாரியின் காவல் நிலையத்தில் பணிபுரிவதாலும், பொது ஜன சாட்சிகள் இல்லாததாலும் புலன் விசாரணை அதிகாரியே புகாரை கொடுத்து புலன் விசாரணை மேற்கொண்டது ஏற்கும் படியாக இல்லை என தீர்ப்பளித்துள்ளதை கருத்தில் கொண்டு, இந்த வழக்கிலும் அ.சா.1, அ.சா.3 ஆகியோர்கள் அ.சா.2ன் காவல் நிலையத்தில் பணிபுரிவதாலும், பொது ஜன சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததாலும், அ.சா.2 தானே புகார்தாரராகவும் இருந்து வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டது இவ்வழக்கை பாதித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. அரசு தரப்பில் எதிரி அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய சட்ட விரோதமாக வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் எதிரி விற்பனையில் ஈடுபட்டது குறித்து எதிரியிடம் இருந்து மது பாட்டில்களை வாங்கிய நபர்களையோ அல்லது வாங்க முற்பட்ட நபர்களையோ சாட்சிகளாக இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தவில்லை. இதன்மூலம் எதிரி அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மதுபானங்களை வைத்திருந்ததாக கூறப்படும் குறச்சாட்டை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. எனவே எதிரி அரசு வரையறுத்த விதிகளுக்கு உட்பட்ட அளவில் தான் மதுபானங்களை வைத்திருந்ததாலும், எதிரி மதுபான கடை மூடியுள்ள நேரத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கான மதுபான பாட்டில்களை வைத்திருந்தார் என கூறுவது நம்பும்படியாக இல்லை என முடிவு செய்திருப்பதாலும், வழக்கு சம்பவ இடத்தை நிரூபிக்கும்பொருட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாததாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரிமீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்கும்படியாக உள்ளதாலும், புகார்தாரரே புலன் விசாரணை அதிகாரியாக இருந்தது இந்த வழக்கை பாதித்துள்ளது என முடிவு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:21 +0530

செய்து உள்ளதாலும் மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே உசிதமானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. எதிரிமீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது அரசு தரப்பின் பொறுப்பாகும். இவ்வழக்கில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரி சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர் ஆகிறார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** எதிரி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)ன் கீழ் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, எதிரியை பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 271(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் எதிரி எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான சுமார் 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy பாட்டில்கள் 13ஐ நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.49/2025 என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி நடக்கவும், மேல்முறையீடு இல்லையெனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மதுபானங்களை அழித்திடவும், பாட்டில்களை அரசுடமையாக்கவும் பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 498(1)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18ம் நாள் வியாழக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:31 +0530

**அரசு தரப்பு சாட்சிகள்**:–

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.ரமேஷ் | – தலைமை காவலர் |
| அ.சா.2 | திருமதி.தமிழ்செல்வி | – காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.3 | திரு.ரஞ்சித்குமார் | – தலைமை காவலர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10.04.2025 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.2 | 10.04.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 10.04.2025 | படிவம் 91 |
| அ.சா.ஆ.4 | 10.04.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**:–

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 180ML அளவு கொண்ட Black Pearl Brandy பாட்டில்கள் 13 |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–** – இல்லை –

**குறிப்பு**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**C.C.No.74/2025**

| S.No | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE **Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Sub Inspector of Police, Kodumudi Police Station, Crime No.58/2025 Under Section 4(1)(C) of TNP Act |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:40 +0530

| | | |
|---|---|---|
| 2 | Name | Ponnarsankar |
| 3 | Father's Name | Selvam |
| 4 | Occupation | Labourer |
| 5 | Residence | 697, Kittakadu, Thiruvarankulam Post, Alankudi Tk., Pudukottai Dt. |
| 6 | Age | 30/2025 |
| 7 | Date of Occurrence | 10.04.2025 |
| 8 | Date of Complaint | -- |
| 9 | Date of Apprehension | 10.04.2025 |
| 10 | Date of Release on bail | Station Bail on 10.04.2025 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 18.11.2025 |
| 13 | Date of Closure of trial | 10.06.2026 |
| 14 | Date of Sentence or Order | 18.06.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.18 11:11:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.